புதன்பொய்கை

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 42

புதன்கிழமை
07 ஜனவரி 2026

மார்கழி 23ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் –16
விலை – ரூபா 50



### மாகாணத் தேர்தல் முறைமை

# இணக்கப்பாடு ஏற்படின் உடனடியாகத் தேர்தல்!

### அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவிப்பு

### விசேட குழுவொன்றுக்கும் பிரேரணை

**கொழும்பு, ஜனவரி 7**

**மாகாணசபைத் தேர்தலை எந்த முறையின் கீழ் நடத்துவது என பொதுவான இணக்கப்பாடு ஏற்பட்டால், எந்தத் தாம தமும் இல்லாமல் அதி விரைவாகத் தேர்தல் நடத்தப்படும் - இவ் வாறு பொதுநிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.**

>>>15

### யாழ்ப்பாணம், நல்லூரில்

## அதிரடிப்படை சோதனை 4 சந்தேகநபர்கள் கைது

### வாள், போதைமாத்திரைகள் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 7
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியிலும், நல்லூர்ப் பகுதியிலும் விசேட அதிரடிப் படையினர் நேற்று மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது நான்கு

>>>15

## அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்கத் திட்டம்

### பிரதமர் ஹரிணி பிரேரணை



கொழும்பு, ஜன. 7
அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கு, ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்கான பிரேரணை பிரதமர் ஹரிணியால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப் பட்டது.

>>>15

## மின்சாரக் கட்டணம் குறைவது உறுதியே

### அமைச்சர் ஜெயக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 7
மின்கட்டணங்களைக் குறைப்பதாக வழங்கிய அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் என்று எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி உறுதியளித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மின்கட்டணம் அதிகரிக்கப் போகின்றது என்றும், அரசாங்கம் மக்களுக்கு விரோதமாகச்

>>>15



### கட்டுப்பாட்டை இழந்த

## 'கப்' வாகனம் மோதி ஒருவருக்குக் காயம்!

மன்னார், ஜன. 7
மாந்தை மேற்கு, அடம்பன் - ஆண்டாங்குளம் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்து மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
வாழைக்குலைகளை ஏற்றியவாறு பயணித்த 'கப்' ரக வாகனம், வேகக் கட்டுப்

>>>15

## அரசபணி வெற்றிடங்கள் 72,000 பேர் இணைப்பு!

கொழும்பு, ஜன. 7
அரச சேவையில் புதிதாக 72 ஆயிரம் பேரை இணைத்துக் கொள்ளவுள்ளதாக, தொழிலாளர் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் இராஜாங்க அமைச்சருமான

>>>15

### அவசரகாலச் சட்டத்தை

## எந்தத் தாமதமும் இன்றி உடனடியாக நீக்குங்கள்!

கொழும்பு, ஜன. 7
அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உடனடியாக நீக்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.
நாடாளுமன்றத்தில் நேற்று

>>>15

### ஆலயச் சிரமதானத்தில் சோகம்

## பாம்பு தீண்டியதால் இளைஞர் துயரச்சாவு



கிளிநொச்சி, ஜன. 7
கிளிநொச்சி - கல்மடுநகர் பகுதியில் ஆலயத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டிருந்த இளைஞர், பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்.

>>>15



முச்சந்தி முரளி

"அவசரகாலச் சட்டத்தின்ர ஆயுளைக் கூட்டுறதில உவையள் ஏன் அவசரப்படுகினம் எண்டதுதான் டவுட்டா இருக்கு கண்டியளோ"

## காற்றின் வேகம் வடக்கில் எகிறும்

யாழ்ப்பாணம், ஜன. 7
வங்காள விரிகுடாவில் தற்போது வலுப்பெற்றுள்ள தாழமுக்கம் காரணமாக, வடக்கு மாகாணத்தில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 60 கிலோமீற்றரை விட அதிகரிக்கும் - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
வங்காள விரிகுடாவில் தற்போது வலுப்பெற்றுள்ள தாழமுக்கம் இலங்கைக்

>>>15

## பெப்ரவரி 28ஆம் திகதி கச்சதீவுப் பெருவிழா!

### யாழ். மாவட்டச் செயலகத்தில் நாளை விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 7
கச்சதீவுப் பெருவிழா பெப்ரவரி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடத்தப்படும் என்று யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அறிவித்துள்ளார்.
இது தொடர்பான அறிவித்தல், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், நெடுந்தீவு பிரதேச செயலகம், கடற்படை மற்றும் துறைசார் பிரதிநிதிகளுக்கு யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தால் அனுப்பப்பட்டுள்ளது.

>>>15

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 06.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4308 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 01 04 09 16 |
| விசேட எழுத்து | T |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 06.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1375 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 16 46 47 51 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 06.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0334 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 2 9 9 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 06.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2414 |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 10 |
| வெற்றி இலக்கங்கள் | 33 45 63 67 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 06.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6066 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 9 0 9 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 06.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2096 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 04 08 25 35 |
| விசேட எழுத்து | W |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 06.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0182 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 26 41 |

# வடக்கில் சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்தாவிடில் போராட்டம்

## ரவிகரன் எம்.பி. எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஜன.7

வடக்குக் கடற்பரப்பில் சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். தவறினால் வடக்கு மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டியிருக்கும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கடற்பரப்பில் இடம்பெறுகின்ற சுருக்குவலை, வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல், வெடிவைத்து மீன்பிடித்தல், லைலா வலை போன்ற தடைசெய்யப்பட்ட சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகளை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டுமென வலியுறுத்தினேன். நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலபத்தியும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தினார்.

சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகள் வடக்குக் கடற்பரப்பில் அதிகரித்துள்ளதை கடற்றொழில் அமைச்சரும், பிரதியமைச்சரும் ஏற்றுக்கொண்டனர். சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சாதகமான பதில்களை அமைச்சரும், பிரதி அமைச்சரும் வழங்கினர்.

ஜனவரியிலிருந்து சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுமென ஏற்கனவே கடற்றொழில் அமைச்சரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தத் தவறினால் வட பகுதி மீனவர்கள் பெரும் போராட்டத்தை மேற்கொள்ளும் நிலை உருவாகும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளேன் - என்றார். (எ-26,246)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 06.01.2026 | செவ்வாய்க்கிழமை | 0774 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| K | 6 8 0 3 0 6 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 06.01.2026 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3040 | H | 22 25 58 79 | |

| சனிதா | | | |
|---|---|---|---|
| திகதி | 06.01.2026 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் | |
| A | 16 36 43 45 | 5201 | |

| SASIRI | | | |
|---|---|---|---|
| திகதி | 06.01.2026 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | | |
| 0870 | 31 33 46 | | |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி | 06.01.2026 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் | |
| | 11 14 23 37 | 4752 | |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 06.01.2026 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 33 | 06 20 32 53 | 2216 |

| அத கோடிபதி | | | |
|---|---|---|---|
| திகதி | 06.01.2026 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் | |
| J | 09 31 35 60 | 2866 | |

# அத்துமீறுகின்ற மீனவர்களை இந்திய அரசு தடுக்கவில்லை!

## வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையம் சாடல்

மன்னார், ஜன.7

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களின் வருகையைத் தடுப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கம் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறிய வளச்சுரண்டலுக்கு எதிராக நாம் நீண்டகாலமாகப் போராடி வருகின்றோம். பேச்சுகளை நடத்தி இருக்கிறோம். கட்டுப்பாட்டு விடயங்களில் அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்துள்ளோம். ஆனால் இன்றுவரை அந்தச் செயற்பாடு தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.

இலங்கைக் கடற்படை கைது நடவடிக்கைகளைத் தொடர்ந்தாலும், தமிழக முதல்வர் கைதான மீனவர்களை விடுவிக்கக்கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுகிறாரே தவிர, எல்லைதாண்டுவதைத் தடுக்க அறிவுறுத்துவதில்லை.

தமிழகத்தின் உள்நாட்டு அரசியலைக் கருத்திற்கொண்டே இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனால் எமது நாட்டு மீனவர்களின் கடற்றொழிலே பாதிக்கப்படுகின்றது.

எனவே இவ்விடயம் தொடர்பாக வடபகுதியில் உள்ள மீன்பிடித் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மீனவ அமைப்புகள், வடபகுதி மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து குரல் கொடுக்கவேண்டும்- என்றார். (சு-56)



# இறந்து ஒதுங்கும் கடலாமைகள்

யாழ்ப்பாணம், ஜன.7

வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் சில நாள்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

கடலின் சீற்றம் காரணமாக கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் காயமடைந்த ஆமைகள் உயிரிழந்து கரையொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கரையொதுங்கும் ஆமைகள் துர்நாற்றம் வீசக்கூடிய நிலையில் கடற்கரையில் உருக்குலைந்து காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சு-27)

# பச்சைமிளகாய் விலை எகிறல்



கொழும்பு, ஜன.7

சந்தையில் பச்சை மிளகாயின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதன்படி, ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 700 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

எதிர்வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நோய் பரவலால் பச்சை மிளகாய்ச் செடிகள் முழுமையான அழிவு பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (சு)

# தங்கதுரை, குட்டிமணிக்கு சிலை அமைக்க அனுமதி





வடமராட்சி, ஜன.7

ரெலோ அமைப்பின் ஆரம்பத் தலைவர்களான தங்கதுரை மற்றும் குட்டிமணி ஆகியோருக்கு வல்வெட்டித் துறையில் சிலை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை நகரபிதா எம்.கே.சிவாஜிலிங்கம் இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

தங்கதுரை மற்றும் குட்டிமணி ஆகியோரின் உருவச்சிலையை அமைப்பதற்கான விண்ணப்பம் 2023ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை நகரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த விண்ணப்பத்துக்கு அமைய எம்.கே.சிவாஜிலிங்கம் அனுமதிக் கடிதத்தை வழங்கியுள்ளார்.

உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் அனுமதிக்கடிதத்தின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன. (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி வரையறைகள் இருந்தாலும் செயற்றிறனுடன் செயற்படுங்கள்

## அமைச்சுச் செயலாளர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை

**கொழும்பு, ஜன.7**

**நிதி வரையறைகளுக்குள் தேசிய முன்னுரிமைகளை அடையாளம் கண்டு மக்களின் நலனுக்காக அதிகபட்ச செயற்றிறனுடன் அந்த நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவது அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளின் பொறுப்பாகும் -என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அமைச்சுகளின் செயலாளர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சர்வதேச நாணயநிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் வசதியின் வரையறைகளின்படி, தேசிய உற்பத்தியில் 13 சதவீதம் மட்டுமே செலவிடமுடியும். அதில் குறைந்தபட்சம் 4 வீதம் மூலதனச் செலவாக ஒதுக்கப்பட வேண்டும். 'நாட்டின் அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல்' என்ற அடிப்படையில் அமைச்சுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிதி வரையறைகளுக்குள் அந்த நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

மூலதனச்செலவாக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டாலும், உகந்த முறையில் அவற்றைச் செலவழித்து தேவையான நிதி மற்றும்பௌதீகமுன்னேற்றத்தை அடைய கடந்தகால அரச பொறிமுறை தவறியதால், நாட்டு மக்கள் பல அபிவிருத்தி வாய்ப்புகளை இழந்துள்ளனர். ஒதுக்கப்பட்ட நிதியை முறையாக நிர்வகிப்பதன் மூலம் எதிர்பார்க்கும் பௌதீக முன்னேற்றத்தை அடைவதே அமைச்சுகளின் செயலாளர்களுக்கு உள்ள முதன்மைப் பொறுப்பு-என்றார். (எ-இ)

## குரங்குகளைக் கட்டுப்படுத்த 11 அமைப்புகளுக்கு துப்பாக்கி

யாழ்ப்பாணம், ஜன.7

குரங்குகளைக் கட்டுப்படுத்த, தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள 11 பொது அமைப்புகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. மந்துவில், மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சரசாலைத் தெற்கு, இராமாவில், மீசாலை வடக்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, நாவற்காடு, கரம்பைக்குறிச்சி ஆகியவற்றில் உள்ள பொது அமைப்புகளுக்கு தலா 2 துப்பாக்கிகள் வீதமும், குடமியன் மற்றும் மாசேரி ஆகியவற்றுக்குத் தலா ஒரு துப்பாக்கியும் வழங்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்தத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 70 விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. பிரதேசங்களில் குரங்குகளின் நடமாட்டம் காணப்படின் தமது பிரிவுக் கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி அலுவலரிடம் மக்கள் தொடர்புகொள்ளமுடியும் என்று பிரதேச செயலர் எவ். சீ. சத்தியசோதி தெரிவித்துள்ளார். (க-9)



## இரணைமடுக்குளத்தின் 6 வான்கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, ஜன.7

இரணைமடுக்குளத்தின் நீரேந்து பிரதேசங்களில் கிடைக்கப்பெறும் கனமழை காரணமாக குளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நேற்று 6 வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. இதன்மூலம் தற்போது விநாடிக்கு 0.149 மில்லியன் கனமீற்றர் நீர் குளத்திலிருந்து வெளியேற்றப்பட்டு வருகின்றது.


தொடர்ந்தும் மழை பெய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதால் குளத்திலிருந்து வெளியேறும் நீரினால் பாதிக்கப்படக்கூடிய தாழ்நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச-113)

## கசிப்பு விற்போரை எச்சரித்து சுவரொட்டி

மன்னார், ஜன.7

கசிப்புக்காய்ச்சுபவர்கள் மற்றும் விற்பனையாளர்களை எச்சரித்து, மடு- பெரிய பண்டிவிரிச்சான் மேற்குப் பகுதியில் வசிக்கும் இளைஞர்களால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மன்னார் மடுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் கசிப்பு விற்பனை எல்லை மீறியுள்ளது. இதனால் பல குடும்பங்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

இந்த நிலையில் "மடு பெரிய பண்டிவிரிச்சானில் கசிப்பு உற்பத்தி செய்வதோ அல்லது விற்பனை செய்வதோ உடனடியாக நிறுத்தப்படவேண்டும். மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப் படும்" என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (க-213)






## ட்ரம்புக்கு விளங்காத அறிக்கை

தனக்கெடாச் சிங்களம் பிடரிக்குச் சேதம் எண்டு தமிழாக்கள் அடிக்கடி சொல்லுவினம். ஆனால் இந்த விசயத்தை வைச்சு பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டி தப்பிற வேலையையும் செய்யலாம். அதைத்தான் ஜே.வி.பி.யின்ர ரில்வின் சில்வா செய்திருக்கிறார். வெனிசுலாவில அடாத்தா உள்ளுக்க போன அமெரிக்கன் ஆமி, அந்த நாட்டின்ர ஜனாதிபதி மதுரோவையும், மனுசியையும் அரஸ்ட் பண்ணி தங்கட நாட்டுக்கு கொண்டுபோட்டுது. சர்வதேசச் சட்டங்களையெல்லாம் மீறித்தான் அமெரிக்கா இந்த வேலையைச் செய்தது. இத்தனைக்கு 'மதுரோ போதைப்பொருள் கடத்தல்காரர், ஊழல்வாதி' எண்டதுதான் அமெரிக்காவின்ர குற்றச்சாட்டு. அப்பிடி ஊழல்வாதி, போதைப்பொருள் கடத்தல் எண்டு குற்றம் சாட்டினா, உலகத்தில இருக்கிற பெருந்தலையளை எல்லாம் அமெரிக்கா இப்பிடிப் பிடிச்சிருக்கோணும். அதோட இப்பிடியான குற்றங்களை மதுரோ செய்திருந்தால், அது அந்த நாட்டின்ர பிரச்சினை. அங்கை இருக்கிற சனம் அதைப் பார்த்துக்கொள்ளும். இது வெனிசுலாவில இருக்கிற எரிபொருளை ஆட்டையைப் போடுறதுக்காக அமெரிக்கா செய்யிற வேலையே தவிர வேற ஒண்டுமில்லை.

திறந்தவீட்டுக்க நாய்புகுந்தமாதிரிவெனிசுலாவுக்க அமெரிக்கா புகுந்து செய்த அட்டூழியத்தை கனநாடுகள் கண்டிச்சிருக்கினம். எல்லாற்றைக் கண்டும் ஓடேக்க கந்தையரின் பேத்தைக் கண்டும் ஓடாட்டி பிழையெல்லோ. அதால அமெரிக்காவைக் கண்டிக்கோணும் எண்டு திசைகாட்டி அரசாங்கம் நினைச்சது. எண்டாலும் நக்கினார் நாவிழந்தார் தானே. எப்பவும் அமெரிக்காவின்ர தயவு இலங்கைக்குத் தேவை. இப்ப கூட ட்ரம்ப் விதிச்ச வரியளை கொஞ்சம் இளக்கினபடியால் தான் இலங்கை மூச்செடுக்க முடியுது. டித்வா புயலால மீள்றதுக்கும் அமெரிக்கா அள்ளிக்குடுத்திருக்குது. அதோட அமெரிக்காவைப் பகைச்சால், சர்வதேச நாணயநிதியம் இலங்கையின்ர கழுத்தைப் பிடிச்சுதிருகத் தொடங்கிடும். இப்பிடிக் கனக்கச் சிக்கல்கள் இருக்கு. ஆனால் அமெரிக்காவைக் கண்டிக்காமல் இருந்தால், ஜே.வி.பி.க்கு கொள்கை இல்லை எண்டு சொல்லி, அவைக்கு வாக்களிச்ச சனமே அதிருப்திப் படுவினம். அடுத்த எலக்சனில வாக்குகள் சரிஞ்சுபோடும்.

ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் எண்ட இக்கட்டான நிலைமை.அதால ஒருவழியைக் கண்டு பிடிச்சினம். அரசாங்கம் கண்டிச்சால் தானே சிக்கல், அதால கட்சி ரீதியாக் கண்டிப்பம் எண்டு ஜே.வி.பி. அமெரிக்காவைக் கண்டிச்சு ஒரு அறிக்கையை அவசரமா விட்டது. ஆனால் பகிடி என்னெண்டால், அந்த அறிக்கையை அமெரிக்காவில இருக்கிற ஒருத்தரும் வாசிச்சிருக்கமாட்டினம். ட்ரம்புக்குக் கூட ரில்வின் சில்வா போன் எடுத்து 'உங்களைக் கண்டிச்சு அறிக்கை விட்டிருக்கிறம் ஒருக்கா பாருங்கோ' எண்டு சொன்னாலே தவிர மற்றும்படி அந்த அறிக்கையைப் பார்த்திருந்தால்கூட, அது தன்னைக் கண்டிச்சு விட்ட அறிக்கை எண்டு ட்ரம்புக்கே தெரிய வாய்ப்பில்லை. ஏனெண்டால், அந்த அறிக்கையைத் தனிச்சிங்களத்தில எழுதி அனுப்பியிருக்கினம். இலங்கையில அறிக்கை எண்டாலென்ன, சுற்று நிருபங்கள் எண்டாலென்ன எல்லாத்தையும் தனிச் சிங்களத்தில விடுகிற பழக்க தோசத்தில அமெரிக்க அதிபருக்கு எழுதின கண்டன அறிக்கையையும் சிங்களத்தில எழுதி விட்டிருக்கினம் போல.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்.ஜன.7
வியாபார நோக்குடன் 13 மதுபானப் போத்தல்களைக் வீதியால் கொண்டு சென்றவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் துறைமுகப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் மது போதையில் வாகனத்தைச் செலுத்தியமையும் உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து இரு வேறு குற்றங்களின் கீழ் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (சு-27.66)

## பயிலுநர் இலிகிதர் தேவை

எமது சங்கத்தின் அலுவலகப் பகுதியில் கடமையாற்றுவதற்கு பயிலுநர் இலிகிதர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாட்களில் ரூபா 20/- செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 22.01.2026 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பதவி : பயிலுநர் இலிகிதர்**

**சம்பளம்: கடமையாற்றும் நாளொன்றுக்கு ரூபா 1081.16சதம்.**
**(மேலும் சங்கத்தினால் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிரூபத்திற்கமைவான கொடுப்பனவுகளும் வழங்கப்படும்).**
**வயது: 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.**

**தகைமைகள்:**

கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. / க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி. அத்துடன் கணனி அறிவு உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்:**

1. நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசியஅடையாளஅட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப்பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து).**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**
(CR/46842) J-1

## வேலையாட்கள் தேவை

**யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகத்திற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை**

- உணவு பரிமாறுபவர் (இருபாலரும்)
- மரக்கறி வெட்டுபவர் (இருபாலரும்)
- ரொட்டி தயாரிப்பவர் (ஆண்)
- தேநீர் தயாரிப்பவர் (ஆண்)
- சமையல் உதவியாளர் (ஆண்)
- சமையலாளர் (ஆண்)
- சிட்டை எழுதுனர் (ஆண்)
- களஞ்சியப் பொறுப்பாளர் (ஆண்)

**தொடர்புகொள்ள :- 070 6739 9611**

(CS/60393) ER

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்


## பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம் உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**ஈ-சன்ஸ் அந்தியகால சேவை**
**இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 2695 / 0774290613**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 17 . 11 . 1962

மறைவு 08 . 12 . 2025

கடந்த 08.12.2025 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் தர்மலிங்கம் ஸ்ரீதரன்

**திதி : தேய்பிறை சங்கடஹர சதுர்த்தி**

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.01.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் மதிய போசன நிகழ்வு நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவி புரிந்த நெஞ்சங்களுக்கும், நேரில், தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள்ளூடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வளர்மதி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(CS/31204) J-1

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## பொதுச்சந்தை, இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான 5ஆவது மீள்கேள்வி அறிவித்தல் 2026

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பன 2026ஆம் ஆண்டிற்கு (17.01.2026-31.12.2026) வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 07.01.2026–16.01.2026 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 16.01.2026 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 16.01.2026 வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்வி விண்ணப்பபடிவங்கள் மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, இரு கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையிலும் **கேள்வியின் பெயர்** தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் **"தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கு எதிர்வரும் **16.01.2026** ஆம் திகதி பி.ப **02.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப் படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2026 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **10,000.00** |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 2 | புத்தூர் பொதுச்சந்தை | - | 1,000.00 | 45,000.00 | **1,305,180.00** |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 3 | கோப்பாய் கோழியிறைச்சிக் கடை | 3,000.00 | 1,000.00 | 15,000.00 | **322,970.00** |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 4 | உரும்பிராய் கோழி இறைச்சிக்கடை | 4,500.00 | 1,000.00 | 20,000.00 | **683,880.00** |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2025.10.05 ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2026.01.07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



## பொய்யாமொழி

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.**

**பொருள்:** ஒப்பாரும் மிக்காருமில்லாதவனுடைய அடியொற்றி நடப்பவர்களைத் தவிர. மற்றவர்களின் மனக்கவலை தீர வழியேதுமில்லை.

# அலட்சியம் வேண்டாம்!

புத்தாண்டுப் பிறப்பின் மகிழ்ச்சிக்கு மத்தியில், அச்சம் தரும் வகையில் டெங்குத் தொற்றின் பரவல் வேகம் எடுத்திருக்கிறது. இந்த ஆண்டின் முதல் ஐந்து நாள்களில் மட்டும் 793 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்ற புள்ளி விவரம், சாதாரணமாகக் கடந்துவிடக்கூடியதல்ல. இது மிகத் தீவிரமான அபாய எச்சரிக்கையாகும். கடந்த ஆண்டில் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் டெங்குத் தொற்றுக்கு ஆளாகியிருந்ததோடு 26 விலைமதிப்பற்ற உயிர்களும் டெங்குத் தொற்றால் பறிபோயிருந்தன. கடந்த ஆண்டின் ஆரம்பத்தோடு ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் தொடக்கம் மிகவும் அச்சமூட்டுவதாக அமைந்திருக்கின்றது. குறுகிய காலத்துக்குள் ஏற்பட்டிருக்கும் இந்தத் திடீர் அதிகரிப்பானது, இந்த ஆண்டு டெங்கு ஒரு பெருந்தொற்றாக உருவெடுக்கும் வாய்ப்புள்ளது என்பதையே கட்டியம் கூறுகின்றது.

கடந்த ஆண்டின் இறுதியில் தொடங்கி, தற்போது வரை நீடிக்கும் மழையுடனான காலநிலையும், அதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குமே இந்தத் தீவிர நிலைக்கு முக்கியமான காரணமாகும். எதிர்வரும் நாள்களிலும் மழை தொடரும் என எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில், அது டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்கத்துக்குச் சாதகமான 'சொர்க்கபுரியாக' மாறக்கூடும். இந்தக் களநிலைவரத்தை உரியநேரத்தில் கட்டுப்படுத்தாவிடில், நிலைமை கையை மீறிச்செல்லும் பேராபத்து நம் கண்முன்னே உள்ளது.

டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் அரச இயந்திரத்துக்கும், சுகாதாரத்துறைக்கும் பெரும் பொறுப்பு இருந்தாலும், பொதுமக்களின் பங்களிப்பே டெங்குக்கு எதிரான போராட்டத்தில் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கான ஒரே வழி, அவை உற்பத்தியாகும் இடங்களை இல்லாமல் செய்வதே. வீடுகள், அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் நீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்வதும், கழிவுகளை முறையாக அகற்றுவதும் ஒவ்வொரு குடிமகனினதும் தார்மீகக் கடமையாகும். என் வீடு, என் சூழல் டெங்கு அற்றது என்று ஒவ்வொருவரும் உறுதிபூண்டால் மட்டுமே இந்தத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும். அதேவேளை, மருத்துவ விழிப்புணர்வும் இந்தக் காலகட்டத்தில் மிக அவசியம். காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால், சுய மருத்துவத்தைத் தவிர்த்து உடனடியாகத் தகுதிவாய்ந்த மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும். கடந்த காலங்களில் டெங்கு உயிரிழப்புகள் ஏற்படக் காரணமே, தாமதித்து சிகிச்சை பெற்றதுதான். சிறிய காய்ச்சலாக இருந்தாலும், அலட்சியம் காட்டாமல் மருத்துவரை அணுகுவது உயிரைக் காக்கும். ஒரு சிறிய தாமதம் அல்லது அலட்சியம் பெரும் இழப்பை ஏற்படுத்திவிடும் என்பதை மக்கள் உணரவேண்டும்.

இயற்கைப் பேரிடராக மழையும், சுகாதாரப் பேரிடராக டெங்குவும் கைகோர்த்துள்ள இத்தருணத்தில், உள்ளூராட்சி மன்றங்களும் சுகாதாரத் துறையினரும் வெறுமனே புள்ளிவிவர அறிக்கைகளை வெளியிடுவதோடு நின்றுவிடக்கூடாது. களத்தில் இறங்கி, நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவேண்டும். சட்ட நடவடிக்கைகள் என்பதைத் தாண்டி, விழிப்புணர்வுடன் கூடிய களப் பணியே இப்போதைய தேவை. ஆண்டின் தொடக்கத்தில் தென்படும் இந்த அபாயக் குறிகாட்டிகளை நாம் அலட்சியப்படுத்தக்கூடாது. இப்போதே விழித்துக் கொண்டு, ஆபத்தை உணர்ந்து செயற்படுவதே காலத்தின் கட்டாயம். அதுவே அநியாய உயிரிழப்புகளைத் தவிர்க்கும் வழியாகும்.






# முறையற்ற சீர்திருத்தத்தால் கல்வியின் தரம் சீர்குலைவு

### *சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு*

**கொழும்பு, ஜன.7**

**அரசாங்கத்தால் சரியான நடைமுறைகளின்றி முன்னெடுக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களால் நாட்டின் கல்வித் தரம் சீர்குலைந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- பல நாடுகள் இணையம் வழியாகக் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. புதிய கல்விச் சீர்திருத்த வேலைத்திட்டத்திலும் அத்தகைய பாதுகாப்பு இருக்க வேண்டும். ஆனால் அவசரமாக, முறையான பொறிமுறையின்றி, தன்னிச்சையாக இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதால் கல்விச் சீர்திருத்தங்கள் சீர்குலைந்துள்ளன. இது மாணவர்களின் உரிமைகளை மீறும் செயல். இந்த நிலைமைக்குப் பொறுப்பானவர்கள் கண்டறியப்படவேண்டும். முறையான விசாரணை மூலம் வெளிப்படையான முடிவுகள் எடுக்கப்படவேண்டும் -என்றார். (எ-இ)

## உயர்தரப் பரீட்சை மேலதிக வகுப்புகள் நேற்றுமுதல் தடை

கொழும்பு. ஜன. 7

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து கல்வி வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நேற்று நள்ளிரவு முதல் தடைசெய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நடத்தப்படாத பாடங்களுக்கான பரீட்சைகள் 2026 ஜனவரி மாதம் 12 ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இலஞ்சக் குற்றச்சாட்டில் இரு பொலிஸார் கைது!

கொழும்பு. ஜன.7

நுவரெலியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தைச் சேர்ந்த ஏ.எஸ்.பி. ஒருவரும், கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் பணியாற்றும் பெண் பொலிஸ் சார்ஜென்ட் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## நவீனுக்கு பிரதான பதவி

2026ஆம் ஆண்டுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவராக மூத்த அரசியல்வாதி நவீன் திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் செயற்குழு உறுப்பினராகவும் அவர் பணியாற்றவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# புலம்பெயர்ந்தோருக்கு அரசால் நலன்புரிகள்

கொழும்பு. ஜன.7

2026ஆம் ஆண்டில், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான பல நலன்புரி நடவடிக்கைகளைச் செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறைப் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலனுக்காக ரூபா 10 மில்லியன் மதிப்புள்ள வீட்டுக்கடன்களை வழங்குவது உட்பட பல நடவடிக்கைகள் எடுக்கப்படும். புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து பேச்சுகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

**நாளை**

வியாழக்கிழமை - மார்கழி 24

08.01.2026

சுபநேரம் : 08.02 - 09.32

ராகுகாலம் : 02.02 - 03.32




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரசபை,
# பொது அறிவி

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் தொழில் முயற்சியை மேற்கொள்வோர், தொ நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பில் எமது சபையின் தொடர்புடைய கிளைகளில் அ

**குறிப்பு:- 1 மாநகர சபையினால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பில் 2025.12.26 ஆம் திகதி வெளியிடப்ப கமைவாகக் கட்டணங்கள் அறவிடப்படும்.**

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | குறித்த நிதியாண்டிற்கான அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதன உரிமையாளர்கள் | ஆதன உரிமையை பெற்றுக்கொண்டவர்கள் மாநகரசபையின் ஆதனவரிப்பகுதியில் பெயர்மாற்றப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம் அல்லது jaffnamc2025cendri.org என்ற இணையத்தள முகவரியிலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.<br>ஆதனவரிப்பகுதியில் பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தினை சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு மூலம் பூர்த்தி செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட உறுதிகள், தோம்பு, நிலஅளவைப்படம், வண்ணப்பதாரர் / விண்ணப்பதாரர்கள் தேசிய அடையாள அட்டைப்பிரதி, ஆதன உரிமையாளர் கையொப்பமிடாத சந்தர்ப்பத்தில் ஆதன உரிமையாளரால் தத்துவ உரிமை கையளிக்கப்பட்டவர் கையொப்பமிடுவதோடு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டு உறுதிப்படுத்திய தத்துவ உரிமைப்பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு ஆதனவரிப்பகுதியை தொலைபேசி மூலமாகவோ நேரடியாகவோ தொடர்பு கொள்ளலாம்.<br>தொலைபேசி இலக்கம்<br>021 021 7887 |
| 02 | ஆதன வரி செலுத்துதல் | மாநகர சபைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு 2026 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறு இருத்தல் வேண்டும் என்று கருதப்படுகின்றது. |
| | | | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் [illegible] கீழ் யாழ்[illegible] உரித்தாக்க[illegible] பயனைக் [illegible] அதிகாரப் பிரதேசத்திற்கு[illegible] சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2025 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி மதிப்பு /மதிப்பீட்டை 2026 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி மதிப்பு / மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலைமதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1)ம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனங்களில் **நிலங்கள், வதிவிடங்கள் என்பவற்றுக்கு வருடாந்த பெறுமதியில் 8% சதவீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு வருடாந்த பெறுமதியில் 10% சதவீதமாகவும்** விதிக்கப்படல் வேண்டும் என்றும்,<br>மேலும், 2026 ஆம் ஆண்டில் பின்வருமாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாணமாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், அட்டவணையின் கீழ் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித்தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகரசபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் |
| | | | செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% இலுமான (பதினைந்து வீதம் மற்றும் சகல ஏனைய இடங்கள் மீத 20% இலுமான (இருபது வீதம் விறாந்துச் செலவு அறவிடப்படும் என்று தீர்மானிக்கப்படுகிறது.<br>முதலாவது காலாண்டு<br>01.01.2026 - 31.03.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 31.01.2026<br>இரண்டாவது காலாண்டு<br>01.04.2026 - 30.06.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 30.04.2026<br>மூன்றாவது காலாண்டு<br>01.07.2026 - 30.09.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 31.07.2026<br>நான்காவது காலாண்டு<br>01.10.2026 - 31.12.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 31.10.2026 |
| 03 | வியாபார உரிமம்/ வியாபார வரி | மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/ தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2026 ஆம் ஆண்டிற்கான உரிய ஆவணங்களை சமர்ப்பித்து வியாபார உரிமம் /வியாபார வரி என்பவற்றை அலுவலகத்தில் 2026.03.31ஆந் திகதிக்குப் பிந்தாமல் படிவ கட்டணத்துடன் உரிய கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் *2026.03.31ஆந்* திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களை செலுத்தத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04 | மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடை செய்தல் | மாநகர சபையின் எல்லைக்குள் மீன், இறைச்சி, மரக்கறி வியாபாரம் செய்வோர் | சபையின் பொதுச் சந்தைகள், மீன் சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் சுற்று வட்டத்தினுள் மரக்கறி, தேங்காய், மீன் வகைகள், கோழி இறைச்சி பழ வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் | 2264/18 ஆம் இலக்க 2022 ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானிக்கமைய பாகம் I இல் 1 தொடக்கம் 39[illegible] வரையான தொழில்கள் செய்வதற்கு [illegible]திக்கப்படுகிறது.<br>[illegible] அதற்கு மேற்பட்ட [illegible] மெருகுவர்த்திகள் [illegible] [illegible]தொழில்கள்<br>[illegible] குறைவானவர்கள் [illegible] கைத்தொழில்கள் |
| | | | 3.ஐந்திற்கு குறைவானவர்கள் வர்த்தக சலவைக் கூடங்கள்.<br>4.பத்துக்கு மேற்பட்ட நெசவுத்தெறிகள் இயந்திரங்களைக் கொண்ட பின்னல், பூத்தையல் கைத்தொழில்.<br>5.நாளொன்றிற்கு 200 லீற்றருக்கு குறைவான தேங்காய்எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்.<br>6.வர்த்தகமட்ட தாவர எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.<br>7.மதுசாரம் சாராத பானங்கள் உற்பத்திசெய்யும் அல்லது போத்தலில் அடைக்கும் கைத்தொழில்கள்.<br>8.உலர் பதனிடல் தொழிற்பாடுகளைக்கொண்ட அரிசி ஆலைகள்.<br>9.அரைக்கும் ஆலைகள்.<br>10.சிகரட்டுக்கள் அல்லது புகையிலை தொடர்பான வேறு உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.<br>11.கந்தகத் தூபமூட்டுதலுடன் கறுவா தூப மூட்டும் கைத்தொழில்கள்.<br>12.சமையல் உப்பு பொதியிடும் மற்றும் பதனிடும் கைத்தொழில்கள்.<br>13.தேயிலை கலத்தல் / கலக்குதல் கைத்தொழில்கள்.<br>14.உணவு உற்பத்தி செய்யும் அல்லது பதனிடும் கைத்தொழில்கள்.<br>15.வெதுப்பகங்கள் மற்றும் இனிப்புப் பண்ட தயாரிப்பிடங்கள்.<br>16.முதிர்ச்சியடைந்த பறவைகளுக்குக் குறைந்ததுமான முதிர்ச்சியடைந்த பறவைகளைக் கொண்ட கோழிப்பண்ணைகள்.<br>17.பன்றிப் பண்ணைகள் அல்லது மாட்டுப் பண்ணைகள்.<br>18.முதிர்ச்சியடைந்த விலங்குகளைக்கொண்ட ஆட்டுப் பண்ணைகள்.<br>19.கலவன் பண்ணைகள்.<br>20.பழம் அல்லது மரக்கறிகள் அல்லது இறைச்சி அல்லது வேறு உணவு களஞ்சியப்படுத்துகைகள்.<br>21.கொங்கிறீற்று முன்வார்ப்பு கைத்தொழில்கள்.<br>22.சீமெந்துக் குற்றிகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.<br>23.சுண்ணாம்புச் சூளைகள்.<br>24."பரிசுச் சாந்தை" மூலப்பொருளாகப் பயன்படுத்தும் ஏதேனும் கைத்தொழில்.<br>25.சுண்ணாம்புச் சிப்பி நொறுக்கும் கட்டியாக்கும் கைத்தொழில்கள்.<br>26.கூரைஓடு மற்றும் செங்கல் சூளைகள்.<br>27.கண்ணாடிப்பொருட்கள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்.<br>28.கருங்கல் வெட்டும் மெருகேற்றும் கைத்தெழில்கள்.<br>29.வெடிபொருட்களைப் பயன்படுத்தி ஒற்றைத்துளை தகர்ப்புடன் கைவினைசார் கரங்கந்தோண்டும் செயற்பாடுகள்.<br>30.மர ஆலைகள் மரக்கட்டை அடிப்படையிலான கைத்தொழில்கள்.<br>31.மரத்தை பருவப்படுத்துவதற்கான கைத்தொழில்கள்.<br>32.தச்சு வேலைத்தளங்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரிலிருந்து காலிக்கு திருத்தல தரிசன யாத்திரை

யாழ்ப்பாணம்,ஜன.7

நாட்டில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம் வேண்டி வருடாந்தம் மேற்கொள்ளும் புனித திருத்தல தரிசன யாத்திரை எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து, காலி சிவன் ஆலயம் வரை இடம்பெறவுள்ளது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து சுவாமிகள் மற்றும் குருமார்களின் ஆசியுடன் ஆரம்பமாகி, பிரதான வீதி ஓரமாக அமைந்துள்ள கைதடிப்பிள்ளையார் ஆலயம் , முறுகண்டிப் பிள்ளையார் ஆலயம், வேப்பங்குளம் பத்திரகாளியம்மன் ஆலயம், மாதம்பை முருகர் ஆலயம், சிலாபம் திரௌபதி அம்மன் ஆலயம், முன்னேஸ்வரம் சிவன் ஆலயம், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், பாணந்துறை முருகன் ஆலயம், காலி முருகன் ஆலயம், காலி சிவன் ஆலயம் வரை தரிசனம் இடம்பெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி அதிகாலை காலி சிவன் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் இடம்பெற்று, தேனாவரம் தேவன்துறை கோவில் தெவிநுவர என்ற விஷ்ணு புத்தர் ஆலயத்தையும்,தொண்டீஸ்வரர் ஆலயத்தையும் தரிசித்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புவர். இதில் பங்குபற்றும் அடியவர்கள் சைவ தமிழ்ப் பண்பாட்டுக் கலாசார உடை அணிந்து வருதல்வேண்டும்.

கலந்து கொள்ள விரும்பும் அடியார்கள் தங்களது விவரங்களை அனுப்பி வைக்கலாம். (க-159)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம்,ஜன.7

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இதில் கமக்கார அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார். (ச)


## PROCUREMENT NOTICE

SLGTI SRI LANKA GERMAN TRAINING KILINOCHCHI INSTITUTE

**SRI LANKA GERMAN TRAINING INSTITUTE - KILINOCHCHI**

**Ministry of Education, Higher Education and Vocational Education**

**Vocational Education Division - Invitation for Bids (IFB)**

The Chairman Procurement Committee on behalf of Sri Lanka German Training Institute (SLGTI) now invites sealed bids from eligible and qualified bidders for the Security service, Cleaning Service, Air condition repairs and maintenance service and Repairing and maintaining of Fire Extinguisher at SLGTI — Kilinochchi.

| Description | Non-Refundable Fee |
|---|---|
| 1. Security Service | Rs: - 5000.00 |
| 2. Cleaning Service | Rs: - 5000.00 |
| 3. Air Condition Repairs & Maintenance Service | Rs: - 5000.00 |
| 4. Repair Maintenance of Fire Extinguisher | Rs: - 3000.00 |

- Bidding will be conducted through National Competitive Bidding (NCB)
- The Bidders having similar experience in supply of above service for at least five years shall be eligible to apply.
- Interested eligible bidders may obtain further information from the office of the Accountant, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi, and inspect the bidding documents at the address given above from 08/01/2026 up to 21/01/2026 during 09:00 am to 02:00 pm on working days.
- Qualification requirements are included in the Bidding Documents.
- A complete set of Bidding Documents in English language for each tender may be collected by the interested Bidders on submission of a written application to Accountant, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi from 08/01/2026 to 21/01/2026 during 09:00 am to 02:00 pm on working days upon payment of a non, Refundable fee.
- Sealed Bids for each tender shall be delivered separately in **ORIGINAL** and **COPY** address to the Chairman Department Procurement Committee, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi on or before 2.00pm on 21/01/2026. Bids will be opened soon after the closing in the presence of the bidder/ bidders' representatives who choose to attend. Late Bids will be rejected and not accepted.
- The Bids must be valid for three months from the date of bid closing date.
- Procurement Committee has the right to reject all the bids, part of the bids or cancel the entire tender. Further, they reserve all the rights with respect to the procurement.

Director/Principal,
Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi.


## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 08 . 1963



மறைவு 03 . 01 . 2026

### குணரட்ணம் ஞானசேகரம் (ராசா)

**(பிரபல தேங்காய் வியாபாரி)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், புதுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் ஞானசேகரம் அவர்கள் கடந்த 03.01.2026 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - இராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சதாசிவம் - தையல்நாயகி தம்பதியினரின் அன்பு மருமகனும், சஞ்சிதா, சஞ்ஜீவன், கஜந்தன், கஜீவன், வினோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜீவன், சுவேகா, சினோயா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்ஷயா, அகானா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்வராணி, குணசீலன் மற்றும் பற்குணராஜா, காலஞ்சென்ற ஞானேந்திரன் மற்றும் நவரட்ணம், ஜெயராஜா, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சறோஜாதேவி மற்றும் பிறேமினி, கௌசலா, கிருஜா, சுகன்ஜா, ஜெகதீஸ்வரன், மனோகரன், கைலாசநாயகி, கேதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


புது வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்
கஜீவன் (மகன்)
077 859 2852

(C[illegible]30394) A

## மரண அறிவித்தல்

பிரம்பன் மகிழ்வில் 13 . 02 . 1942



ஊந்திரன் அழைப்பில் 06 . 01 . 2026

### அமரர் வைரமுத்து நாகேந்திரம் (பேபி)

**(ஸ்ரீ முருகன் சைவ உணவகம் மாவட்டபுரம் ஸ்தாபகரும், உரிமையாளரும்)**

கொல்லங்கலட்டி கிளானை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் தற்போது றொட்டியாவடி சுண்ணாகத்தை வதிவிடகாகவும் கொண்ட அமரர் வைரமுத்து நாகேந்திரம் அவர்கள் 06.01.2026 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவஞானசோதி (குஞ்சு), அமரர் சந்திராதேவியின் பாசமிமு கணவரும், காலம் சென்ற வைரமுத்து சின்னதங்கத்தின் அன்பு மகனும், அமரர்கள் தம்பி ஐயா, மகேஸ்வரியின் மருமகனும், நாகேஸ்வரி, சர்வேஸ்வரி, மகேஸ்வரி, அமரர் சிவகணேசதாஸ் ஆகியோரின் சகோதரனும் ஜிப்சன், பிரபாளினி, லதாங்கி, விஜிதா ஆகியோரின் அன்புத் தகப்பனும், சசிகுமார், சசீந்திரராஜா, ஜிவகுமார், வினோபா, தர்சினி, சசிகரன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவர்.

அன்னாரின் இறுதி கிரிகைகள் இன்று 07.01.2026 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று மதியம் 12.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அனைவருக்கும் அறிய தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

V2 அவனியூ,
KKS வீதி, றொட்டியாலடி.
07[illegible]72082, 0776900719

தகவல்:
குடும்பத்தினர்.
மனைவி,மக்கள்,பெறாமக்கள்

(CS/231208) ER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தால் தகுதி சார் சான்றோர்க்கு வருடந்தோறும் வழங்கப்பெறும் உயர் விருதான "சிவத்தமிழ் விருது" இவ்வருடம், இன்று (07.01.2026)

## எம் மிருதங்கப் பேராசான்
## சங்கீதரத்தினம், தண்ணுமை வேந்தர், முழவியல் ஞாயிறு

# திரு. எம். சிதம்பரநாதன்

அவர்களுக்கு வழங்கப்படுவதையிட்டு நிறைந்த ஆனந்தம் கொள்கிறோம். குருநாதரின் பாதம் பணிந்து வாழ்த்துகிறோம். குருநாதருடன் சிவத்தமிழ் விருது பெறும் ஏனைய சான்றோர்களையும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.







**சிவத்தமிழ் விருதினைப் பெற்றிடும் - எம், அரும்**
**தவக்குருநாதரைப் போற்றியே வணங்குகிறோம். !**

சற்குணங்கள் நிறை குருநாதரவர் ! - லய
வித்துவத்தில் நிறைவானவரவர் !
எக்கணமும் எமைவழி நடாத்துவதில் - கலை
உலகமே போற்றும் பண்பாளரவர் !

கற்றுக் கொடுப்பதில் தாதையாய் - பின்
கனிவு கொடுப்பதில் அன்னையாய்
நித்தமும் புதுத்தாளக் கணக்குகள் - தந்து
புதிதாயெமை ஆக்கிய மாண்பினர் !

இகத்தினில் புகழ்மிகு விருதுகள் - பல
கிடைத்துமே பெருமிதமிலாதவர் ! - இன்று
சிவத்தமிழ் விருதினை பெற்றிடும் - எம், அரும்
தவக்குருநாதரைப் போற்றியே வணங்குகிறோம் !

**வாழ்த்தி மகிழும் மாணவர்கள்:**

- நல்லை க. கண்ணதாஸ் (பிரான்ஸ்)
- பத்மலிங்கம் வசந்தன் (பிரான்ஸ்)
- பசுபதீஸ்வரன் சதீஷன் (அவுஸ்ரேலியா)
- தங்கராஜா மகேந்திரராஜா (சுவிஸ்)
- பரமசாமி கிருபாகரன் (லண்டன்)
- மாயராஜா புவியழகன் (கனடா)


(CS/60395)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை


கண் ஒரு உறுப்பு,
பார்வை ஒரு
கலை.

- மார்ஷ்



# கவுணாவத்தை வேள்வி

## பாரம்பரியத்தை பறைசாற்றும் சடங்கு



■ கில்டா தேவராசா

இயற்கையோடு நெருக்கமாக வாழும் கிராமப்புற மக்கள், தங்களது வாழ்க்கை முறையிலும் பழக்க வழக்கங்களிலும் பல நம்பிக்கைகளைப் பின்பற்றி வருகின்றனர். இன்று தொழில்நுட்பம் எவ்வளவாக வளர்ந்தாலும், இந்த நம்பிக்கைகள் மக்களுடனும் கலாசாரத்துடனும் பின்னிப் பிணைந்தே காணப்படுகின்றன. இத்தகைய நம்பிக்கைகள் சங்க காலம் தொட்டே கிராம சமூகங்களில் வேரூன்றியுள்ளன. அவ்வாறான ஒரு முக்கியமான சடங்காகவே யாழ்ப்பாணம் கருகம்பனை எனும் பகுதியில் அமைந்துள்ள கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தில் நடைபெறும் வேள்விச் சடங்கை குறிப்பிடலாம்.

கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தில் வேள்விச் சடங்கு நடைபெறும் விதம் தொடர்பில் நோக்கின், ஆரம்பத்தில் தவில் அடித்தபடி ஆலயத்தைச் சுற்றிவந்து கும்பம் வைப்பார்கள். பின்னர், எட்டாவது நாள் வைகாசி பூரணைக்கு அடுத்துவரும் சனிக்கிழமையில் இந்த வேள்வி நடைபெறும். அதற்கு அடுத்த வெள்ளிக்கிழமை எட்டாவது மடை நடக்கும். இதன்போது கோழி வெட்டப்படும். ஆதி மூலத்தில் இருந்து வெளியில் உள்ள அரச மரம்வரை பெரிய மடை வைத்து, பழங்கள், பலகாரங்கள் எல்லாம் வைக்கப்படும். இதன் பின்னர் எட்டாம் மடையன்றுதான் பூசை நடைபெறும். அன்றையதினமே கிடாய்களும், கோழிகளும் பலி கொடுக்கப்படும். அன்றையதினம் கிடாய்கள் அலங்கரிக்கப்பட்டு வாகனங்களில் ஊர்வலமாக கொண்டு வரப்படும். முதலாவது பொங்கல் ஆலய வாயிலில் உரிமையாளர்களால் இடம்பெறும். அதில் வைத்து கிடாயொன்றும் பலியிடப்படும். ஆரம்பத்தில் ஆலயத்தில் சமைத்துக் கொடுக்கும் பழக்கமும் இருந்தது. தற்போது அந்தப் பழக்கங்கள் இல்லை. அவ்வாறான முறை காணப்படுவதும் இல்லை பிறகு பூஜை இடம்பெறும் போது பூஜை கிடாய் என்று ஒன்று பலியிடப்படும் பூஜை செய்து கோழிக்கிடாய்க்கு விளக்கு காட்டின பிறகு ஒரு கோழியும் கிடாயும் பலியிடப்பட்டு தொடர்ந்து பலியிடப்படும் சுற்றிவர தகரத்தினால் அடைக்கப்பட்டு மக்கள் யாவரும் பார்வையிட முடியாத வகையிலேயே இப்பலிகள் கொடுக்கப்படும்



வேள்வியின்போது சமூக வித்தியாசங்கள் நீங்கி, அனைவரும் இணைந்து செயற்படும் தன்மை இயல்பாகக் காணப்படுகின்றது. ஆக, கவுணாவத்தை நரசிங்க வைரவர் வேள்வி, கிராமப்புற நம்பிக்கைகள் எவ்வளவு ஆழமாக மனித சமூகத்தில் வேரூன்றியுள்ளன என்பதை உணர்த்துகின்றது. இது ஒரு ஆன்மிக நிகழ்வைத் தாண்டி, ஒரு சமூக ஒற்றுமையையும், கலாசாரப் பாரம்பரியத்தையும் சுமக்கும் நிகழ்வாகத் திகழ்கின்றது. ■

---

● மருத்துவர் பா.சயந்தன்
(குழந்தைகள் –சிறுவர் சத்திரசிகிச்சை நிபுணர்)

# குழந்தைகளை துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்போம்

ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பான வாழ்வு ஒரு அடிப்படை உரிமை

குழந்தை துஷ்பிரயோகம் என்பது சமுதாயத்தில் மறைந்தே நடைபெறும் ஒரு கடுமையான பிரச்சினையாகும். இது உடல் ரீதியான, மன ரீதியான, பாலியல் துஷ்பிரயோகம் அல்லது அலட்சியம் போன்ற பல வடிவங்களில் ஏற்படலாம். இத்தகைய துஷ்பிரயோகங்கள் குழந்தையின் உடல் மற்றும் மனநலத்தில் நீண்டகாலப் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

பல குழந்தைகள் பயம், குழப்பம் அல்லது மிரட்டல் காரணமாகத் தங்களுக்கு ஏற்பட்ட துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்தமுடியாமல் போகின்றனர். ஆகவே, பெரியவர்கள் எச்சரிக்கை அறிகுறிகளைக் கவனிக்கவேண்டும். விளக்கமில்லாத காயங்கள், நடத்தை மாற்றங்கள், சிலரிடம் அதிக பயம், தனிமை விரும்புதல், பள்ளி செயற்றிறன் குறைவு, தூக்கக் கோளாறுகள், வயதுக்கு மீறிய பாலியல் அறிவு போன்றவை முக்கியமான எச்சரிக்கை அறிகுறிகளாகும்.

குழந்தை பாதுகாப்பு வீட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். "என் உடல் எனக்கு சொந்தம்" என்பதை குழந்தைகளுக்கு தெளிவாக கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அசௌகரியமாக தோன்றும் தொடுதலுக்கு "இல்லை" என்று சொல்லும் உரிமை இருப்பதை உணர்த்த வேண்டும். மேலும், நம்பிக்கையுடன் பேசக்கூடிய பாதுகாப்பான பெரியவர்கள் யார் என்பதை குழந்தைகள் அறிந்திருக்க வேண்டும். அன்பும் உரையாடலும் நிறைந்த குடும்ப சூழல் குழந்தைகளை பாதுகாக்கும் வலுவான கவசமாகும். பள்ளிகள் மற்றும் குழந்தை பராமரிப்பு நிலையங்கள் குழந்தை பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் துஷ்பிரயோகத்தின் அறிகுறிகளை அடையாளம் காணும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். சந்தேகம் ஏற்பட்டால், குழந்தையின் ரகசியத்தன்மையை பாதுகாத்து, சட்டப்படி உரிய அதிகாரிகளிடம் தகவல் வழங்க வேண்டும்.


மருத்துவ பணியாளர்களும் குழந்தை துஷ்பிரயோகத்தை அடையாளம் கண்டு, உரிய முறையில் அறிவிக்க வேண்டிய பொறுப்பை கொண்டுள்ளனர். ஆரம்பகட்ட தலையீடு குழந்தைகளை மீண்டும் மீண்டும் பாதிக்கப்படுவதிலிருந்து காக்கும். சமூக விழிப்புணர்வு, பெற்றோர் கல்வி, மற்றும் சட்டத்தின் கடுமையான அமலாக்கம் குழந்தை பாதுகாப்புக்கு அவசியமானவை.


குழந்தை துஷ்பிரயோகத்தைத் தடுக்க முடியும். குழந்தைகளின் குரலைக் கேட்போம், உடனடியாக நடவடிக்கை எடுப்போம், ஒன்றிணைந்து குழந்தைகளின் மரியாதையும் பாதுகாப்பும் எதிர்காலமும் காக்கப்பட வேண்டும். குழந்தைகளை பாதுகாக்கும் சமுதாயமே தன் எதிர்காலத்தையும் பாதுகாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமந்தனாறு மக்களின் விதியும் வீதியும்





**வினோதினி விஜயரட்ணம்**

“ஒரு மணித்தியாலப் பயணத்திற்கு இரண்டு மணித்தியாலங்கள் தவம் கிடக்க வேண்டியுள்ளது. காய்கறிகளைச் சந்தைக்குக் கொண்டு போவதற்குள் அவை வாடிவிடுகின்றன; எமது வாழ்வாதாரமும் சேர்ந்தே வாடுகிறது” - இது கிளிநொச்சி தர்மபுரத்திலிருந்து ஏழு கிலோமீற்றர் தொலைவில் உள்ள பிரமந்தனாறு கிராமவாசியான தங்கவேலுவின் குமுறல்.

விவசாயத்தைப் பூர்வீகமாகக் கொண்ட 800க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இந்தப் பிரமந்தனாறு கிராமம், இன்று அபிவிருத்திப் பாதையில் செல்லமுடியாமல் அல்லாடுவதற்கு முக்கியமான காரணம் , குண்டும் குழியுமாகப் புழுதி படிந்து கிடக்கும் பிரமந்தனாறு - விசுவமடு வீதிதான். இந்தவீதி வெறும் பாதை மட்டுமல்ல, அது அந்த மக்களின் வாழ்வாதாரம், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை இணைக்கும் உயிர்நாடி. ஆனால், கடந்த பத்து வருடங்களாக இந்த வீதி போக்குவரத்திற்கு லாயக்கற்ற நிலையில் சிதைந்து கிடப்பதுதான் கொடுமை.

**முடங்கிப்போகும் விவசாயமும் சிதையும் கல்விக்கனவும்**

விவசாயிகள் தமது உற்பத்திகளை விசுவமடு சந்தைக்குக் கொண்டுசெல்லமுடியாத நிலையில், பலர் விவசாயத்தையே கைவிட்டு கூலித் தொழிலுக்குச் செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் நிலை இன்னும் மோசம். “மழை பெய்தால் பாடசாலைச் சீருடையும் சப்பாத்தும் சேறாகிவிடும். பல நாள்கள் பாதியிலேயே வீட்டுக்குத் திரும்பியிருக்கிறேன்” என்கிறார் உயர்தரம் கற்கும் மாணவியான டிலைக்சனா. உயர் கல்விக்காக அயற்கிராமங்களுக்குச் செல்லும் மாணவர்கள், வீதி வசதி இன்மையால் உறவினர் வீடுகளில் தங்கிப் படிக்கவேண்டிய கட்டாயத்துக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

**இருளில் மடியும் உயிர்கள்**

இரவு நேரங்களில் மின்விளக்குகள் இன்றி இருளில் மூழ்கிக்கிடக்கும் இந்த வீதியில் விபத்துகள் அன்றாட நிகழ்வாகிவிட்டன. அண்மையில் ஆரம்பப்பிரிவு மாணவி ஒருவர் விபத்துக்குள்ளான சம்பவம் கிராமத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. கண்ணிவெடி அகற்றும் பணிகள் மற்றும் ஆடைத்தொழிற்சாலைகளுக்கு அதிகாலையிலேயே வேலைக்குச் செல்லும் இளைஞர்களும், யுவதிகளும் இந்த வீதியூடாக மரண பயத்துடனேயே பயணிக்கின்றனர்.

“நோயாளிகளை அவசரமாகத் தர்மபுரம் ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல இந்த வீதி பெருந்தடையாக இருக்கின்றது. உடைந்த பாலங்களால் பல விபத்துகள் நடக்கின்றன. அண்மையில் பாலத்தில் விழுந்த முதியவர் ஒருவரை நான் ஓடிச்சென்று காப்பாற்றினேன்” என அஜித்தா என்ற யுவதி தனது மனவேதனையை வெளிப்படுத்தினார்.

**வாக்குறுதிகள் எனும் மாயவலை**

மயில்வாகனபுரம், பிரமந்தனாறு மற்றும் கல்லாறு ஆகிய கிராமங்களை இணைக்கும் பிரதான வீதி இது. அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பலமுறை மனுக்கள் அளித்தும், போராட்டங்கள் நடத்தியும் கிடைப்பதென்னவோ வெற்று வாக்குறுதிகள் மட்டும்தான். “திருத்தித் தருகிறோம்” என ஆரம்பிக்கப்படும் வேலைகள் பாதியிலேயே கைவிடப்படுவது வாடிக்கையாகிவிட்டது.மக்களின் அடிப்படைத் தேவையை நிறைவேற்றத் தவறும் அதிகாரவர்க்கத்தின் மெத்தனப் போக்கே இக்கிராமத்தின் பின்தங்கிய நிலைக்குக் காரணம்.

ஒரு வீதியின் மேம்பாடு என்பது அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தின் குறியீடு. ஆனால், பத்து வருடங்களாகச் சீரமைக்கப்படாத இந்த வீதி, பிரமந்தனாறு மக்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக உள்ளது. விவசாயிகளின் நலன்கருதியும், மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டும் இந்த வீதியைச் சீரமைக்க வேண்டியது அரசின் உடனடிக் கடமையாகும்.

பிரமந்தனாறு மக்களின் விடியல் அந்த வீதியின் மேம்பாட்டில்தான் தங்கியிருக்கிறது. அதிகாரிகள் இனியும் மௌனம் காக்கப் போகிறார்களா? அல்லது அந்த மக்களின் புழுதி படிந்த கனவுகளுக்கு உயிர் கொடுக்கப் போகிறார்களா?

## கோரத்தாண்டவம்

நஞ்சுண்ட வானம்
கொட்டித் தீர்த்த
பெரும் முழக்கத்தினால்
திசைக்கொன்றாய்
கசைந்தோடியது நட்சத்திரம்

பெரும் பிரளயத்தை
நிகழ்த்திவிட்டு
மௌனமாகத் தூங்குகிறது பூமி
நிரந்தரத் தூக்கத்தோடு முடியட்டும்
உனது கோரத்தாண்டவம்

ஓலக்குரலெடுத்து
அழுது புலம்புவர்களின்
காலடி மண்ணுக்குள்
தீண்டித் தீர்த்த உயிர்கள்
மண் மூடிக் கிடந்து
மேலெழுந்து வருகின்றன

கடலும்காடும்
மலையும் மண்ணும்
இடி இடித்த வானமும்
கோரப்பசி தீர்த்த புயலும்
பெரும் துயரத்தின்



● டானியல் சௌந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்

# ித்தல் - 2026

ில் நிறுவனங்கள் ஏனைய அமைப்புக்கள் அனைத்தும் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கீழ்வரும் லுவலக நாட்களில் மேலதிக விபரங்களையும் சேவையையும் பெற்றுக்கொள்ளலாம்.

**ள்ள 2469 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்**

| | | | |
|---|---|---|---|
| | | | 33.ஐந்து அல்லது 10 வேலையாட்களுக்கு குறைவானவர்களுக்குமான உணவு தயாரிக்கும் இடங்கள் அல்லது உணவு பரிமாறுதல் சேவைகள்.<br>34.நாளொன்றில் 25 அல்லது 100 ஆட்களுக்கு குறைந்ததுமான விடுதிகள் அல்லது அதனையொத்த வசிப்பிடங்கள்.<br>35.கராஜ்கள்.<br>36.கொள்கலச் சாலைகள்.<br>37.அச்சகங்களும் எழுத்து அச்சு இயந்திரங்களும்.<br>38.சடலங்களை நறுமணமூட்டிப் பாதுகாத்தலுடனான பிணவறைகள்.<br>39.இப்பட்டியலின் அட்டவணையின் பாகம் ஈ இல் உள்ளடக்கப்படாத ஏதேனும் செயற்பாடு/கைத்தொழில்கள். |
| 06 | காணி உப பிரிவிடுகை | ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று துண்டுகளாகப் பிரிக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| 07 | காணி ஒருங்கிணைத்தல் | ஆதன உரிமையாளர்கள் | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆதனங்கள் இணைக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் |
| 08 | படவரைஞராக பதிவு செய்தல்/புதுப்பித்தல் | படவரைஞர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதுடன மற்றும் 1978 ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை/ ஒழுங்கு விதி நடைமுறைக்கமைவாக 2025.11.26 ஆந் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கமைய மாநகர சபையில் 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் 23 ஆந் திகதிக்கு முன்னர் எமது சபை எல்லைக்குள் படவரைஞராக சேவைகளை வழங்க விரும்பியவர்கள் எமது தலைமை அலுவலகத்தில் பதிவினை மேற்கொண்டிருத்தல் அல்லது புதுப்பித்து இருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாதோரினால் அல்லது புதுப்பிக்காதோரினால் வரையப்படும் படங்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கல்வித்தகைமை Drafting Technology Civil Level-5 இருத்தல் வேண்டும். |
| 09 | துவிச்சக்கரவண்டி உரிமம் மற்றும் மிருகவரி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | 2026ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி உரிமம் மற்றும் மிருகவரி உரிமம் (நாய்களுக்கானது) என்பன 31.03.2026ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் படிவ கட்டணத்துடன் உரிய கட்டணங்களை செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 10 | விளம்பரங்களை [illegible] அல்லது [illegible]படுத்தல் | விளம்பரங்களை [illegible] (முகவர்கள், [illegible]) [illegible] | மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்ட [illegible] பயன்படுத்திக்கொண்டு [illegible] 1952/14 ஆம் இலக்க 2016 [illegible] மாதம் 02 ஆம் தி[illegible] வெளியிடப்பட்ட [illegible] விதி[illegible] எல்லைக்குள் பதாதைகள், விளம்பரங்களை நிறுவும் அல்லது காட்சிப்படுத்தும் விளம்பர நிறுவனங்கள் அல்லது வேறு நபர்கள் சபையின் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தல் வேண்டும். மேலும் காட்சிப்படுத்தல்களை, முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல் ,கண்காணிப்பு செய்தல் கட்டுப்படுத்தல் மாநகர சபையால் மேற்கொள்ளப்படும். அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்கள் ஆகியவற்றிற்கான கட்டணத்தை *2026.03.31ஆம்* திகதிக்கு முன் செலுத்தி சபையின் புதுப்பித்தல் அனுமதியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும். இவ்விடயம் உரிய விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வர்த்தக நிறுவன உரிமையாளர்களது பொறுப்பாகும். யாருக்கும் ஆபத்தில்லாத வகையில் விளம்பரப்பலகை பொருத்தப்படல் வேண்டும் ஏதாவது சந்தர்ப்பத்தில் விளம்பரப்பலகையால் ஒருவருக்கு அல்லது சொத்துக்கு நட்டம் ஏற்படும் பட்சத்தில் விளம்பர உரிமையாளரால் ஈடு செய்யப்படல் வேண்டும். அத்துடன் உரிய அனுமதி பெறப்படாது காணப்படுகின்ற சகல விளம்பரங்களும் வேறு எந்த அறிவித்தலுமின்றி உரிய இடத்திலிருந்து *2026.03.31ஆந்* திகதிக்குப் பின்னர் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்விடயம் தொடர்பில் மேன்முறையீடுகள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது . |
| 11 | திண்மக் கழிவுகள் தொடர்பாக குடியிருப்பாளர்கள், வியாபார நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை. | மாநகர சபை எல்லைக்குள் வதியும் குடியிருப்பாளர்கள், வியாபார நிலைய உரிமையாளர்கள், அரச, தனியார் நிறுவனங்கள். | 1. ஆதன உரிமையாளர்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப்பொருட்களை மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லுதல் ஆகியவை பொதுச்சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது.<br>2. வீட்டுகழிவு (குசினி) கழிவுகளை வாரத்தில் ஆகக்குறைந்தது 02 தடவை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை உறுதிப் படுத்துவதற்காக குடியிருப்பாளர்களிற்கு திண்மக்கழிவகற்றல் பதிவு அட்டை வழங்கப்பட்டுள்து. வீட்டுக்கழிவு (குசினி) தரம்பிரித்து வழங்கப்படல் வேண்டும். இச்சேவை முற்றிலும் இலவசமானது. எக் காரணம் கொண்டும் தரம்பிரியாத கழிவுகள் சேகரிக்கப்பட மாட்டாது. தரம் பிரியாது கழிவுகளை வீதியோரங்களில் வீசுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>3. தாங்கள் வீடுகளில் சேரும் மேலதிக திண்மக்கழிவுகளை உரியமுறையில் தரம் பிரித்து மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு மாநகரசபையின் கட்டண கழிவகற்றல் வாகனத்தில் அதற்கான கட்டணத்தினை அவ்விடத்தில் செலுத்தி கழிவுகளை அகற்றிக் கொள்ளமுடியும். அதற்கான உபபற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.<br>4. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், மற்றும் தனியார் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள, ஏனைய தொழில்முறை நிறுவனங்கள், முடிதிருத்தும் நிலையங்கள் என்பன தங்கள் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை உரிய கழிவகற்றல் கட்டணங்களை மாதாந்த அடிப்படையில் அல்லது தடவைகளிற்கான அடிப்படையில் மாநகரசபையில் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை காண்பித்து கிரமமான முறையில் கழிவகற்றல் சேவையினை பெற்றுக்கொள்ள முடியும். சபையினது குறித்த கழிவகற்றல் முறைக்கு ஒத்துழைக்காது கழிவகற்றலினை மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>5. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுப் பொருட்களை போடுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச்செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.<br>6. பொது இடங்களில், வீதிகளில் கழிவுகளை கொட்டுவோரை கண்காணிப்பதற்காக எமது சபை ஊழியர்கள் இரவு பகலாக கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். அத்துடன் CCTV camera வும் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இனம் காணப்படுவோர்மீது உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>7. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு கழிவகற்றல் வாகனம் ஒழுங்கு படுத்தப் பட்டு ஒரு குறிப்பிட்ட வீதிக்கு வாரம் ஒன்றிற்கு ஆகக் குறைந்தது 03 தடவைகள் கழிவகற்றல் வாகனமானது கழிவுகளை சேகரிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டள்ளது.<br>8. திரவக் கழிவகற்றல் சேவையினை மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு சபை வாகனங்கள் மற்றும் சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட வாகனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். |
| 12. | முச்சக்கரவண்டி, கார் தரிப்பிடம் | மாநகரசபை [illegible] [illegible]லிருந்து [illegible] வழங்குவோர் | மாகாண சபையினால் 2016.02.02ஆம் திகதி [illegible] 1952/14ஆம் இலக்க [illegible] குடியர[illegible] வர்த்தமானிப் பத்[illegible]கையில் [illegible] நியமத் [illegible]விதிகளின் [illegible] 04 பிரிவு 11 [illegible] பிரகாரம் மாநகர சபை [illegible] காணப்படும் முச்சக்கரவண்டி, கார் தரிப்பிடங்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு செய்தல், கட்டுப்படுத்தல் மாநகர சபையால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் அவ்வாறு சபையின் கீழ் உள்ள தரிப்பிடங்களில் மட்டுமே முச்சக்கரவண்டி, கார் நிறுத்தி சேவையிலீடுபட முடியும் என்பதோடு குறித்த தரிப்பிடத்திற்கு நாளாந்த கட்டணமாக ரூபா 50/= இனை எமது அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபடமுடியாது என்பதுடன் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். |
| 13 | வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக | வீதிஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குவோர் | சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்திற்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மாநகர சபையில் முறைப்படி அனுமதியினைப் பெற்ற பின்பே தமது சேவையினை ஆரம்பித்தல் வேண்டும். |
| 14 | நீர்வழங்கல் சேவை | நீரவழங்கல் சேவை தேவைப்படுடையோர் | 1.நீர்வழங்கல் சேவை<br>பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைக்கு மாநகர சபையுடன் தொடர்புகொண்டு கட்டணம் செலுத்துவதன்மூலம் குடிநீரையும், வாடகைக்கு தண்ணீர் தாங்கியினையும் பெற்றுக்கொள்ளமுடியும். |
| 15 | பொதுசுகாதாரம் பேணல் | ஆதன உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள், வர்த்தகர்கள் | 1.சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் காணப்படும் பொதுசுகாதாரத்திற்கு இடையூறாகவுள்ள காணி உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொதுசுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதுடன், டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள், பொருட்களை காணியில் இல்லாதொழிக்க வேண்டும். தவறுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>2.உணவு குடிபானம் போன்றவை கையாளும் இடங்கள் அல்லது உற்பத்தி மற்றும் விற்பனை செய்யுமிடங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு திருப்திகர அறிக்கையின் அடிப்படையிலேயே கடமையாற்ற அனுமதிக்கப்படல் வேண்டும்.<br>3.20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனையானது 2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம் தடைசெய்யப்பட்டுள்ளது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (தொடர்ச்சி) மாநகரசபை, யாழ்ப்பாணம் பொது அறிவித்தல் - 2026

| | | | |
|---|---|---|---|
| 16 | கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது | கால்நடைகள்/ நாய்கள் வளர்ப்போர் | சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக விலங்குகள் நடமாடுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக திரியும் விலங்குகள் எதுவித முன்னறிவித்தலுமின்றி மாநகர சபையால் பிடிக்கப்படும். பின்னர் அவை உரிய காலத்தினுள் உரிமை கோரும் பட்சத்தில் பிடிகூலி தண்டம் மற்றும் பராமரிப்புச்செலவுடன் மீள வழங்கப்படுவதுடன் உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். |
| 17 | வீதி ஒழுங்கு முறைகளை பேணல் | ஆதன உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள், வர்த்தகர்கள் | சபை எல்லைக்குள் வீதியோரங்களில் பாதைக்கு இடையூறாக மரங்கள் மற்றும் பூக்கன்றுகள் நாட்டுதல்/ வளர்க்கப்படுதல், கொங்கிறீற்றிலான கட்டுமானம் கட்டுதல், இருக்கைகள் அமைத்தல், இளைப்பாறல் மடங்கள் கட்டுதல், நடைபாதை வியாபாரம் செய்தல் என்பன பொதுமக்களிற்கு இடையூறாகவும், பொதுஒழுங்கு சீர்குலைவுக்கும் காரணமாக காணப்பட்டால் அவை தடைசெய்யப்படும் என்பதுடன் வளவிலிருந்து வீதியை நோக்கி வெளியே வளர்ந்திருக்கின்ற தாவர மற்றும் மரக்கிளைகளை உடனடியாக அகற்றுதல் வேண்டும். சபை எல்லைக்குள் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தரப்படுகின்றது. மேலும் போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் கல், மண், சல்லி போன்ற கட்டடப்பொருட்கள் சேமித்துக்கொள்வதும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 18 | பொதுமயானங்களின் பயன்பாடு | மயானங்களை பயன்படுத்துவோர் | 1. கோம்பயன் மணல் இந்து மயானத்தில் உடலங்களை எரித்தல்/புதைத்தல் செயற்பாடுகள் மாநகர சபையில் கட்டணம் செலுத்தி அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ளப்படல் வேண்டும்.<br>2. கட்டணத்தை செலுத்துவதற்கு அலுவலக வேலை நாட்களில் மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை நானாவித இறைவரிப்பகுதியிலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பாதுகாவலர் பகுதியினூடாகவும் செலுத்தப் படலாம்.<br>3. அனுமதிக்காக மேற்குறிப்பட்ட இடங்களில் விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இறப்பு தொடர்பான உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 19 | கழிவு நீர் | ஆதன உரிமையாளர்கள் / வர்த்தகர்கள் | பகிரங்க வெள்ள வடிகால்களில் வீட்டுக் கழிவு நீர் வியாபார நிறுவனங்களின் கழிவு நிர் சேகரிக்கப்படல் சட்டவிரோதமானதாகும். |
| | | | ஆவ்வாறு செயற்படுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 20 | சிகிச்சா நிலையம் | தாய், சேய் | • கர்ப்பவதிகள் சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• பிரசவ பின் தாய்மார்களுக்கான சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• குழந்தைகள் சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• குடும்பத்திட்ட சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• புதிய திருமண தம்பதியருக்கான சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• சுகவனிதையர் சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• இளவயதினருக்கான சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• போசாக்கு சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• பாடசாலை தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடு<br>• விசேட தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடு |
| 21 | வெளிக்கள செயற்பாடு | மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பொது மக்கள் | • வீட்டுத் தரிசிப்பு ( சனத்தொகை கணக்கெடுப்பு, கற்பவதிகள், பிரசவ பின் தாய்மார்கள், குழந்தைகள், முன்பள்ளி சிறார்கள், யௌவன பருவத்தினர், குடும்பத்திட்டம் அனுசரிப்போர், புதிய திருமணத் தம்பதியினர் )<br>• சுகாதார கல்வி செயற்பாடுகள்<br>• தொற்றுநோய், தொற்றாநோய் தடுப்பு செயற்பாடுகள்<br>• கள நிறைபார்க்கும் மையங்களை நடாத்துதல்<br>• முன்பள்ளி தரிசிப்புகள்<br>• தாய்மார் கழகங்களை வழி நடாத்துதல்<br>• உள்ளூர் கலந்துரையாடல்கள் பங்கேற்றல் |
| 22 | பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் வழங்கப்படும் சேவைகள் | மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பொது மக்கள் | • தொற்று நோய் கட்டுப்பாடு<br>• தொற்றா நோய் கட்டுப்பாடு<br>• நீர் சுகாதாரம்<br>• விலங்கு விசர் நோய் தடுப்பு<br>• உணவு சுகாதாரம்<br>• மருத்துவ நிலயங்களின் சுகாதார செயற்பாடுகள்<br>• தொழிற்சுகாதார மேம்பாடு<br>• பொதுச் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை<br>• திருவிழா சுகாதார மேற்பார்வை |
| 23 | Gov pay இணையவழி ஊடான கொடுப்பனவு | மாநகர சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச , தனியார் நிறுவனங்கள் | மாநகர சபைக்கான கட்டணங்களான ஆதன வரி, பதிவு செய்தல் மற்றும் பரிசோதனைக் கட்டணங்கள் - ஆதனம், வியாபார வரி, வியாபார உரிமம், உயர் தொழில் மீதான |
| | | | உரிமம், களியாட்ட வரி, வணிக ஸ்தலங்களுக்கான வாடகை, இறைச்சிக்கடை வாடகை, வாடகை (வீதி உருளை, மண்டபம், அரங்கு), இறைச்சிக்கடை குத்தகை, சந்தைக் குத்தகை, நல்லூர் திருவிழா குத்தகை, தண்ணீர் கட்டணங்கள், விளம்பரக் கட்டணங்கள், இந்துமயான கட்டணங்கள், கழிவகற்றல் கட்டணங்கள், பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் கட்டட விண்ணப்பங்கள், வாகன நிறுத்தல் கட்டணங்கள், படிவக் கட்டணங்கள், தண்டப்பணங்கள் என்பவற்றை பிரபலமான நிதி தொழிநுட்ப பயன்பாடுகள் மற்றும் இணைய வழி (Online) வங்கித் தளங்கள் மூலம் Govpay இணைய வழியூடாக எளிதில் செலுத்தி கொள்ள முடியும். மேலதிக தகவல்களை www.govpay.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிட முடியும். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் ஏற்புடைய நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் சகல பொது மக்களும் மிகவும் கவனமெடுத்து செயற்படுமாறும், குறித்த அறிவித்தல்களை பின்பற்றத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

(CR/46844) J-1

முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# திஸ்ஸ விகாரைக்குத் தீர்வு; தமிழ்க் கட்சிகளே குழப்பம்!

## அமைச்சர் சந்திரசேகர் குற்றச்சாட்டு

தையிட்டி திஸ்ஸ விகாரை சம்பந்தமாக நாம் மிகவும் நேர்மையாக செயற்பட்டு, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முற்படுகின்றோம். எனினும், சில தமிழ்க் கட்சிகளே மக்களைக் குழப்புகின்றன என்று அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பேரிடர் நிலைமையை முகாமை செய்வதற்காகவே அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் மக்கள் நலன்சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே முன்னெடுக்கப்பட்டது. மாறாக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.
கடந்த காலங்களிலேயே பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகாரசட்டம் என்பன முறைகேடாக பயன்படுத்தப்பட்டன.
தமிழ் மக்கள் மீது பொலிஸ் அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டது என இங்கு சிறிதரன் எம்.பி. குற்றஞ்சாட்டினார். அவ்வாறு எவ்வித அராஜகமும் கிடையாது. வடக்குக்குச் சென்று மக்களிடம் கேட்டால், அராஜக நிலைமையை ஏற்படுத்துவது யாரென்பது தெரியவரும். தையிட்டி திஸ்ஸ விகாரை சம்பந்தமாக நாம் மிகவும் நேர்மையாக செயல்பட்டு, பிரச்சினையை தீர்ப்பதற்கு முற்படுகின்றோம். வடக்கில் கடந்த காலங்களில் மோசடிகள் இடம்பெற்றன. அவை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இதனால் சில அரசியல் வாதிகளுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் தமது இருப்பு இல்லாமல் ஆகிவிடும் என்ற அச்சத்தாலேயே தமிழர்களை குழப்புகின்றனர் - என்றார். (ம-44)

### கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் விடுதி பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி ம.அனிசலா அவர்களின் அன்புத் தந்தை சுந்தரம் மகாலிங்கம் அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிச் சங்கம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

### ஸ்ரீ அம்மன் பட்டு சென்டர்

பழைய பட்டு புடைவை பணமாகிறது



தங்களிடம் உள்ள பழைய (கிழிந்த) பட்டு புடைவைகள், பட்டு வேஷ்டிகள், பட்டு பாவாடைகள், டிஷ்யு புடைவைகள், எந்நிலையில் இருந்தாலும், காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.

இடம்:
நல்லூர் மயிலூரான் அரங்கம் திருமண மண்டபம்


ஆரம்பம்:
07.01.2026 முதல் 13.01.2026 வரை

590, பருத்தித்துறை வீதி, நல்லூர் கந்தசுவாமி தெற்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்பு: 075 7628 189

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 10 . 1958



மறைவு
27 . 12 . 2025

### ஸ்ரீகணேஸ் சோமசுந்தரம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா, நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சோமசுந்தரம் ஸ்ரீகணேஸ் அவர்கள் கடந்த 27.12.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - பாரதி தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீதரன், பத்மினி மற்றும் ஸ்ரீகாமினி (London), ஸ்ரீகுமார் (Norway) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தனன், திலகா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரவந்தி, அரவந்தி, விருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகாசினி, சௌமி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2026) புதன்கிழமை அரியாலை இலக்கம் 172, கண்டி வீதி அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் அவரது பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டு கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 60392) A

## 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்



அன்புடையீர்! கடந்த 11.12.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்பு சகோதரர்

### சபாபதிப்பிள்ளை ஆனந்தராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ம் நாள் அந்தியேட்டிக் கிரிகைகள் 8.01.2026 வியாழக்கிழமை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறுவதுடன் 10.01.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் (தம்பகாமம், பளை) நடைபெறும். சபீண்டிகரண நிகழ்வில் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிராத்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

நன்றி

மாங்கண்டு வளவு
தொண்டைமனாறு

இங்ஙனம்
குடும்பத்தினர்

(CS 46843) ER

## ஆலமர விருட்சமாய் எமக்கு நிழல் தந்து, வழிகாட்டிய எமது குடும்ப குல தெய்வங்களின் முதலாம், இரண்டாம் வருட நினைவஞ்சலி

### திரு. மயில்வாகனம் அமிர்தலிங்கம் (அமுதர்)
### திருமதி அமிர்தலிங்கம் தங்கமணி (குஞ்சு)

அப்பா ..... அம்மா ......
மாமா ...... மாமி .......
அம்மப்பா ........ அம்மம்மா ........

உங்கள் நிழல் தேடி அலைகின்றோம் .....
இந்த அனல் உலகில் !!
உங்கள் குரல் கேட்க காதுகளும் ஏங்குது .....
உங்கள் முகம் காணக் கண்களும் தேடுது ......
நீங்கள் இல்லாத வாழ்வில்,
எல்லாம் இருந்தும் ஏதும் இல்லை !
உங்கள் அன்புச் சிறகுகள் தந்த வானில்,
பறக்க மறந்த பறவைகள் நாம் .....
நீங்கள் விட்டுச் சென்ற நினைவுகள், எங்களை
வழிநடத்தும் விளக்குகள் .....
உங்கள் அன்பே பலம் ! உங்கள் நினைவுகளே
எங்கள் துணை !

எங்கிருந்தாலும் தொடர்ந்தும் எங்களை வழிநடத்துங்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்கு தினமும் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !



தோற்றம்
03.02.1952
மறைவு
20.12.2024

தோற்றம்
29.11.1951
மறைவு
14.02.2024


"தாஜ்மஹால்"
கைதடி தென்கிழக்கு,
கைதடி.

(CS/60390) J-1

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் இதயங்களில் என்றும் எப்போதும்



தாயின் மடியில் 13.06.1940

கர்த்தருக்குள் மகிமையில் 04.01.2026

## நிறுவுநர் மற்றும் இயக்குநர் வணக்கத்திற்குரிய போதகர் சாம்சன் குலநாயகம் ராஜசூரியர்


எங்கள் நிறுவுநர் மற்றும் இயக்குநர் வணக்கத்திற்குரிய போதகர் சாம்சன் குலநாயகம் ராஜசூரியர் கர்த்தருக்குள் மகிமையடைந்துவிட்டார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது பூதவுடல் ஜனவரி 8 ஆம் திகதி வியாழக்கிழமை மதியமளவிலிருந்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் வைக்கப்படும். ஜனவரி 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு மானிப்பாய் சி.எஸ்.ஐ. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

It is with deep sorrow, that we inform that our Founder and Director Rev. Pastor Samson Kulanayagam Rajasuriar has gone to be with the Lord. His mortal remains will lie at Angel International School Manipay from Thursday 8th January, afternoon. Burial will be on Saturday the 10th at 11.00 am at the CSI Cemetery, Manipay.

**ஏஞ்சல் சர்வதேச பாடசாலைக் குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமளவு வெடிபொருள்கள் வாகரையில் நேற்று மீட்பு!



மட்டக்களப்பு, ஜன. 7

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெருமளவான வெடிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவர், வயலைச் சுற்றி எல்லை வேலி அமைப்பதற்காகக் குழி தோண்டியபோது இந்த வெடிபொருள்கள் தென்படுவதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விளைவாகவே இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை போர்க் காலத்தில் புதைக்கப்பட்டவை என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## இணக்கப்பாடு...

நாடாளுமன்றத்தின் இவ்வருட முதலாவது அமர்வு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று ஆரம்பமானது. இதன்போது, மாகாணசபைத் தேர்தலை எந்த முறையின் கீழ் நடத்துவது என ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக விசேட குழுவொன்றை அமைக்குமாறு அமைச்சர் சந்தன அபேரத்ன பிரேரணையை முன்வைத்தார். இதன் பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமைச்சர் சந்தன அபேரத்ன மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது. எதிர்க்கட்சிகள் அனைத்தும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை ஊடாக இணக்கப்பாட்டுக்கு வந்தால் மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்தலாம். அதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

சட்ட விதிகளின் கீழ் எல்லை நிர்ணயப் பணிகள் நிறைவடையாமையே மாகாணசபைத் தேர்தலை இதுவரை நடத்த முடியாமல் போனதற்கான காரணமாகவுள்ளது. எனவே, எல்லை நிர்ணயப்பணியைப் பூர்த்தி செய்து தேர்தலை நடத்துவதா? அல்லது 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்து தேர்தலை நடத்துவதா? என்பது குறித்துத் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வுகளுக்குப் பின்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது குறித்த இறுதிமுடிவு எடுக்கப்படும். தேர்தலை நடத்துவதற்கு எம்மிடம் நிதியுள்ளது - என்றார். (அ-ம-44)

## அதிரடிப்படை...

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அனைவரும் 24 தொடக்கம் 28 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்களிடம் இருந்து ஒரு வாள், 4 அலைபேசிகள், ஒரு மோட்டார் சைக்கிள், 860 போதைமாத்திரைகள் என்பன மீட்கப்பட்டன. அவர்களை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## அரசபணி...

அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2026ஆம் ஆண்டில் பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான மற்றும் நெருக்கமான சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்கள் உட்பட, முழு அரச சேவையிலும் உள்ள வெற்றிடங்கள் நிவர்த்தி செய்யப்படவுள்ளன.

குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான ஒப்புதலையும், 20 பில்லியன் ரூபா நிதியையும் அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியுள்ளது. பொருளாதார மேம்பாடு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய அறிவுறுத்தல்களுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரச சேவையில் உள்ள வெற்றிடங்களுக்கு போட்டித் தேர்வை எதிர்கொண்ட பின்னரே பட்டதாரிகளும் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள் - என்றார். (அ-ம)

## காற்றின்...

கரையை அண்மிக்கும் போது காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்து. இதனால், நாளைமுதல் வடக்கு மாகாணத்தில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 60 கிலோமீற்றரை விட அதிகரிக்கும். கிழக்கு மாகாணத்திலும் காற்றின் வேகம் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடியும் - என்றுள்ளது. (அ-ம-26-66)

## பெப்ரவரி...

இதையடுத்து, கச்சதீவுப் பெருவிழாவை நடத்துவது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நாளை நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், யாழ்ப்பாணம் மறைமாவட்டப் பிரதிநிதிகள், கடற்படையினர், துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, கச்சதீவுப் பெருவிழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது. நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் என். பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நெடுந்தீவு உதவிப் பிரதேச செயலாளர், நெடுந்தீவுக் கடற்படைக் கட்டளை அதிகாரி மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். குறித்த கூட்டத்தில் கடந்த வருடத் திருவிழாவின்போது அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், இந்த வருடம் அந்தக் குறைபாடுகள் இல்லாமல் பெருவிழாவை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம-66-26)

## கப்...

பாட்டை இழந்து மரமொன்றுடன் மோதி, பின்னர் மோட்டார்சைக்கிளில் பயணித்தவரையும் மோதித் தள்ளியது என விபத்தைப் பார்த்தவர்கள் பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.

இதன்போது ஒருவர் காயமடைந்த நிலையில் அவர் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## மின்சாரக்...

செயற்படுகின்றது எனவும் எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாகப் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர். மூன்று ஆண்டுகளுக்குள் 30 வீதத்தால் மின் கட்டணத்தைக் குறைப்போம் என நாங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி வழங்கியுள்ளோம். நிச்சயம் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம். எனவே, ஓராண்டுகால ஆட்சியை வைத்து பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்வதை எதிர்க்கட்சிகள் தவிர்க்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

## அவசரகாலச்...

நாடாளுமன்றத்தின் இவ்வருட முதலாவது அமர்வு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று ஆரம்பமானது. அவசரகாலச் சட்டம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்ட நிலையிலேயே, அந்தச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பது தொடர்பில் பிரதமர் பிரேரணையை முன்வைத்தார்.

இதன்போது, பிரதமர் ஹரிணி தெரிவித்ததாவது:-

டித்வா புயலின் பின்னர் இலங்கையில் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டது. பேரிடரையடுத்து நாட்டில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை. தற்போதும் மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் உள்ளனர். அவர்களுக்கான சேவைகளை இடையூறின்றி மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அதனாலேயே அவசரகாலச்சட்டம் தொடர்ந்து பேணப்படுகின்றது.

அவசரகாலச் சட்டத்தை நாங்கள் தவறான நோக்கங்களுக்காகப் பயன்படுத்த மாட்டோம். கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கு அந்தச் சட்டம் பயன்படாது என்ற வாக்குறுதியை நாங்கள் வழங்குகின்றோம் - என்றார். (அ-ம-44)

## எந்தத்...

நடைபெற்ற விவாதத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்ததாவது:-

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவைகளை வழங்குவதற்கு எவரும் எதிர்ப்பை வெளியிடப் போவதில்லை. அரசின் செயற்பாடுகளுக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம். நிலைமை இவ்வாறு இருக்கையில் எதற்காக அவசரகால சட்டம் நீடிக்கப்படுகின்றது என்ற கேள்வி எழுகின்றது. ஊடகங்களை ஒடுக்குவதற்காகவும், அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காகவுமா எவ்வாறு செய்யப்படுகின்றது? அவசரகால சட்டத்தை நீடிக்காது, அதனை மீளப்பெறுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

## பாம்பு...

சிறிகாந்தன் கிருசிகன் (வயது- 23) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பாம்பால் கடியுண்ட அவர், உடனடியாக மீட்கப்பட்டு தருமபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அந்த நபர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்; இரு மாதங்களுக்குள் சட்டம்

கொழும்பு, ஜன. 7
இலங்கைக்கு வரும் வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களைக் கையாள்வதற்கான நடைமுறைகள் தொடர்பில், எதிர்வரும் இரு மாதங்களுக்குள் புதிய சட்டங்கள் உருவாக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் வருவதற்கு, இந்தியாவும் அமெரிக்காவும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தன. இதையடுத்து, வெளிநாட்டுக் கப்பல்களைக் கையாள்வதற்கான சட்ட ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் உருவாக்கி வந்தது. இந்தப் பணிகளுக்காக விசேட குழுக்களும் நியமிக்கப்பட்டன.
எனினும், கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இந்தப் பணிகள் நிறைவடையவில்லை. இதையடுத்தே, இன்;னும் இரு மாதங்களுக்குள் சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.
வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்கள் வருவதற்கு, முன்னாள் ஜனாதிபதி ரணிலின் அரசாங்கம் ஒரு வருடகாலத் தடை விதித்து நடவடிக்கை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# நண்பனைக் காப்பாற்றியவர் முதலைக்கு இரை

முதலையின் பிடியிலிருந்து தனது நண்பனைப் போராடி மீட்ட நபர் அதே முதலையிடம் சிக்கி நீருக்குள் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.
இந்தச் சோகச் சம்பவம் அக்கரைப்பற்று - பெரியபள்ளக்காட்டுப் பகுதியில் உள்ள கல் ஓயா ஆற்றில் இடம்பெற்றுள்ளது.
இரண்டு நண்பர்கள், ஆற்றில் நின்றிருந்த படகு ஒன்றை மீட்பதற்காக ஆற்றின் மறுகரைக்கு நீந்திச் சென்றுள்ளனர். இதன்போது, எதிர்பாராத விதமாக நீரிலிருந்து வெளிப்பட்ட முதலை அவர்களில் ஒருவரைத் தாக்கி நீருக்குள் இழுத்துச்செல்ல முயன்றுள்ளது.
தனது நண்பனை முதலை கவ்விச் செல்வதைக் கண்ட மற்றைய நபர் சிறிதும் அஞ்சாமல் ஒரு கட்டையால் முதலையைத் தாக்கி, பெரும் போராட்டத்துக்கு மத்தியில் தனது நண்பனை முதலையின் பிடியிலிருந்து விடுவித்து காப்பாற்றினார்.
அவரை மீட்ட நபர் கரையேற முற்பட்டபோது அதே முதலை மீண்டும் அவரைத் தாக்கி நீருக்குள் இழுத்துச் சென்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் ஒலுவில் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவரே முதலைக்கு இரையாகியுள்ளார். (ச-இ)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன்பாக 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதி 50m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 150m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண் தரை, நண்ணீர் ஊற்று
- 18 அடி பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:- 074 029 2338
076 990 3039**

(CS 31209) ER


## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 03 . 1948



இறப்பு 05 . 01 . 2026

### மேரி திரேஸ் ராணி எட்வேட்

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சுண்டிக்குளி 63, குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. மேரி திரேஸ் ராணி எட்வேட் அவர்கள் திங்கட்கிழமை அன்று (05.01.2026) காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து செல்வநாயகம் - மரியபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், கபிரியேல் - ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான வைத்திய கலாநிதி கபிரியேல் எட்வேட் அவர்களின் அன்பு மனைவியும், ஆதர் யேசுதாசன் (பிரான்ஸ்), றெஜினா சிவகுமார் (பிரான்ஸ்), அலக்கோக்கம்மா ஜெயபாலன், காலஞ்சென்ற போல் பெஞ்சமின் ஆகியோரின் அன்பு சகோதரியும், எடின்ரன் யூலியானஸ் (உரிமையாளர் - எட்வேட் மேக்ஸ்), எட்வின் யூட் (பிரான்ஸ்), எட்றின் ரொனி யோசவ்வாஸ் (மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் (MLT/A) - கனடா), வைத்திய கலாநிதி எட்னா மரிய விண்ணேற்றொனி (ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர் - கொடிகாமம்), லயன் எட்மன் சேவியர் ஜங்ரன் (ஆளுநர் செயலகம், வட மாகாணம்) றெனா வேர்ஜினேற் (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ் மாவட்ட செயலகம்), காலஞ்சென்ற செபஸ்ரியன் ரொனி ஆகியோரின் அன்புத் தாயும், பொலின்மேரி, லெற்றீஷியா (B.A- பேராதனைப் பல்கலைக்கழகம்) குயின் அலன்ரீனா (கணக்கியல் நிர்வாகி - கனடா), கலாநிதி யஸ்ரின் யூட் (சிரேஷ்ட விரிவுரையாளர், திறந்த பல்கலைக்கழகம், இலங்கை), பேர்னடின், பெர்னான்டோ (உரிமையாளர் - MAX MART, சுண்டிக்குளி) ஆகியோரின் அன்பு மாமியும், முருகதாஸ், றொஜியா, றொசாறியா, றோஸ்அரசி, றொக்சியா, மகாராணி, றிபன்ஜியா, மரியோ எட்வேட், சிசில்ராணி, ஜொறிஸ் எட்வேட், கிறேஸ்ராணி, எட்றீனா, கத்தரியானா, எட்வேட் ராஜா, மடுரென்ஸ் போல், மக்னஸ் போல், ஏஞ்சல் திரேஸ் ராணி, மக்ஸ்வெல், எட்வினா வேர்ஜின் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், யசிந்தனின் அன்பு பூட்டியும், பாவிலுப்பிள்ளை லில்லிறோஸ் மற்றும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் அமலோற்பவம், வைத்திய கலாநிதி கபிரியேல் ஜோர்ஜ் ஆகியோரின் அன்பு மைத்துணியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை வியாழக்கிழமை (08.01.2026) முற்பகல் 10.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியினைத் தொடர்ந்து அன்னாரின் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எடின்ரன் - 077 226 8641,
எட்வின் யூட் - 0033 75324 6259,
யோசவ்வாஸ் - 0016 47403 5255,
Dr. எட்னா - 077 4400 295,
சேவியர் - 077 242 3880,
றெனா - 077 290 7493

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 46144) A

## 31ஆம் நாள் வீட்டக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.12.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப சகோதரர்

அமரர்

### நாகலிங்கம் சர்வானந்தம்

அவர்களின் வீட்டக்கிருத்திய கிரியைகள் இன்று (07.01.2026) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

82/8, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 077 067 4452

சகோதரி குடும்பம்

(CS 31212)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.